செ.வெ.எண்: 27 நாள்: 08.02.2017

# விராலிமலை சட்டமன்ற தொகுதி நம்பம்பட்டியில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட துணை சுகாதார நிலைய கட்டிடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், நம்பம்பட்டியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட துணை சுகாதார நிலைய கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிய துணை சுகாதார நிலைய கட்டிடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நம்பம்பட்டியில் செயல்பட்டு வந்த துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டதுடன், சுகாதாரத்துறையின் சார்பில் கண்காட்சி அரங்கமும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இப்புதிய கட்டிடம் 830 ச.அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளதுடன் மருத்துவர் அறை, செவிலியர் அறை, நோயாளிகள் படுக்கை அறை, ஓய்வு அறை உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற கட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்பு இந்த துணை சுகாதார நிலையம் மிக சிறிய கட்டிடத்தில் இயங்கி வந்தது. தற்பொழுது இப்புதிய கட்டிடம் கட்டப்பட்டதன் மூலம் அதிக இடவசதியுடன் சிறப்பாக செயல்படுவதுடன், இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் விராலிமலை அரசு மருத்துவமனையில் பெறவேண்டிய பல்வேறு மருத்துவ வசதிகளை இங்கு பெற்று பயன்பெறலாம். மேலும் தமிழகஅரசு கர்ப்பிணி பெண்களுக்கு ரூ.12000 மகப்பேறு நிதியுதவித்தொகை, அம்மா குழந்தைகள் நல பரிசுப்பெட்டகம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எனவே அனைத்து பொதுமக்களும் இதனை உரிய முறையில் பயன்படுத்தி நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (பொது சுகாதாரம்) மரு.பரணீதரன், முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, உதவி செயற்பொறியாளர் (பொ.ம.ப) திரு.இசையரசன், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**